# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.13/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணம செட்டி | மதம் | : இந்து |
| த/பெ | : தர்மய்யா செட்டி | ஜாதி | : -- |
| வயது | : 87 | கிராமம் | : அமிர்தாபுரம் |
| தொழில் | : -- | வட்டம் | : திருத்தணி |

**24.06.2025**

**<u>பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

2. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தது என்றால் ஆந்திராதேவி அழைத்து வந்தார். வழக்கு சொத்து என்ன சொத்து என்றால் வீடு மற்றும் நிலம் ஆகும். வீடு கிராம நத்தத்தில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தான வீட்டில் ஜானகிராம செட்டி பிறந்ததில் இருந்து குடியிருந்து வந்தார் என்றால் ஆமாம். அவர் அந்த வீட்டில்தான் இறந்தார் என்றால் ஆமாம். அந்த வீட்டை ஆந்திராதேவிக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் தெரியாது. அந்த உயிலை 14.07.2001ல் அவர் ரத்து செய்து விட்டார் என்றால் தெரியாது.

3. உயிலை ரத்து செய்த பின்பு ஆந்திராதேவி அந்த வீட்டை தன் மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக கேள்வி பட்டேன். அதன் பிறகு ஆந்திராதேவியும் அவரது மகனும் சேர்ந்து இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு ஜானகிராமனுக்கு சாதகமாக தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தெரியாது. வழக்கு ஜானகிராமனுக்கு தீர்ப்பான பின்பு பட்டா, வரி ரசீது, மின் ரசீது ஆகியவற்றை ஆந்திராதேவி பெயரில் இருந்து தன் பெயருக்கு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மாற்றினார் என்றால் தெரியாது.

4. 30.04.2012 ல் ஸ்ரீதேவிக்கு ஜானகிராம செட்டி செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஸ்ரீதேவிக்குதான் சொந்தம் என்றாலும் அவர் பெயருக்கு பட்டா, வரி ரசீது, மின் கட்டனம் ஏற்பட்டு ஸ்ரீதேவி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. ஆந்திராதேவிதான் அனுபவித்து வருகிறார். ஜானகிராம செட்டி இறந்த பின்பு அவரது மனைவி அதே வீட்டில்தான் இருந்தார்கள் என்றால் ஆமாம். ஆந்திராதேவி திருமணமான பின்பு ஆவடியில் தன் கணவருடன் குடியிருந்தார் என்றால் இங்கேயும் இருப்பார். ஆவடியிலும் இருப்பார். ஆந்திராதேவியே தனது சாட்சியத்தில் ஆவடியில் குடியிருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அவருக்கு ஆவடியில் வீடு இல்லை. கொரட்டுரில்தான் வீடு உள்ளது.

5. எனது சாட்சியத்தில் ஒரு இடத்தில் பாகப்பிரிவினை கொடுத்ததாகவும் ஒரு இடத்தில் சீதனமாக கொடுத்ததாகவும் சொல்லியிருப்பதில் எது உண்மை என்றால் பாகப்பிரிவினையாக இல்லை. வாய்மொழியாக ஆளுக்கு ஒரு வீடும் சிறிது நிலமும் கொடுத்தார். அதில் ஆந்திராதேவிக்கு இந்த வீடு கொடுத்தார். வீட்டில் பட்டா மாற்ற, மின் கட்டணம் மாற்ற நான் உடன் சென்றேனா என்றால் போனேன். அது எந்த வருடம் என்றால் வருடம் தெரியாது. நான் பட்டா மாற்றியதாக சொல்லும் காலக்கட்டத்திலும் ஜானகிராம செட்டியும் அவரது மனைவியும்தான் அந்த வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் அவர்களுடன் ஆந்திராதேவியும் இருந்தார்.

6. ஜானகிராமசெட்டிக்கு காச நோய் இருந்ததாகவும் அவரது மனைவியை மருத்துவமனையில் வைத்து பார்த்தார்கள் என்று நான் சொல்வதில் எந்த வருடம் வைத்தியம் பார்த்தார்கள் என்றால் வருடம் தெரியாது. எக்மோரில் ஜானகிராம செட்டிக்கு மருத்துவர் சந்தோஷிடம் மருத்துவம் பார்த்தார்கள். ஜானகிராம செட்டிக்கு தலையில் அடிப்பட்டு மருத்துவம் பார்த்தது எந்த மருத்துவமனை என்றால் எனக்கு தலையில் அடிப்பட்டதோ அறுவை சிகிச்சை செய்ததோ தெரியாது. நான் கேள்விப்பட்டேன். வீடு தொடர்பாக தகராறு ஏற்பட்டு அதற்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

7. ஜானகிராம செட்டிக்கு தலையில் அடிப்பட்டு மருத்துவம் பார்த்தது ஸ்ரீதேவிதான் என்றால் இல்லை. ஆந்திராதேவிதான் பார்த்தார். நான்கு பெண் வாரிசுகளுக்கும் ஜானகிராம செட்டி சொத்தை எப்படி கொடுத்தார் என்றால் வாய்மொழியாகதான் கொடுத்தார். யாருக்கும் எதையும் கொடுக்கவில்லை. நான்

ஆந்திராதேவிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் வழக்கு விவரமே தெரியாமல் பொய்யாக ஆந்திராதேவிக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. ஆந்திராதேவி வழக்கு சொத்தில் இருந்ததேயில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து மராமத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை.

8. ஜானகிராம செட்டி உயிருடன் இருந்தபோது ஆந்திராதேவி அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் ஆந்திராதேவிதான் அவர் அப்பா இருந்த போது மராமத்து செய்தார். ஜானகிராம செட்டி வட்டிக்கு பணம் கொடுப்பார் என்றால் விவசாயம் செய்து அதை வைத்துதான் ஜீவனம் செய்தார். வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. ஆந்திராதேவி மராமத்து எதுவும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)